# கற்பகம்



நல்லையம் பதியில் மேவி
நம்வினை நீக்கி ஆளும்
எல்லையில் அழகுத் தெய்வம்
மாலனும் கந்தவேளின்
சொல்லரும் விழவு காண்போர்
கோபுரம் தொழுவோர்க் கெல்லாம்
இல்லையே கவலை என்றும்
இன்பமே பொங்கும் வாழ்வில்.

புலவர் ம. பார்வதிநாதசிவம்


ஆனி - ஆடி
1987
விலை ரூபா 2-50

வைகாசி
1987
மலர் 8
இதழ் 5

வெளியீடு:
வடமாகாண
தெ.ப.பொ. கூட்டுறவு
சங்கங்களின் சமாஜம்
330, கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22713

ஆசிரியர்
கே. வி. நடராஜன்

அட்டைப்பட விளக்கம்
நல்லைக் கந்தன்
தேருலா

வடிவமைப்பும்
அச்சிடும்
ஸ்வர்ணம் பப்ளிசிடீஸ்
125 A, ஸ்ரேசன் வீதி
யாழ்ப்பாணம்

# கட்டட இடிபாடுகளுக்குள் நசுங்கிய திட்டங்கள்

வடமாகாண தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு சமூக பொருளாதார அமைப்பென்பது அரசாங்கம் உட்பட சகலரும் அறிந்ததே.

இனப்பிரச்சினை ஆரம்பமாகியதிலிருந்து இச்சங்கங்களும் மெல்ல ஈடாட்டம் காணத் தொடங்கின. ஆயினும் முற்றுமுழுதாக ஸ்தம்பித நிலையை அடையாதவாறு இவற்றைக் கட்டிக் காத்து வந்தது பெரியதொரு சாதனை என்றே சொல்லவேண்டும்.

இனப்பிரச்சினை உச்சக்கட்டமடைந்த கடந்த நான்கு ஆண்டுகளில் இச்சங்கங்கள் சமூக பொருளாதார அமைப்பென்ற குறுகிய நோக்கை மாற்றி குடாநாடு தழுவிய முழுத் தமிழினத்தின் பொருளாதார அமைப்பாக தம்மை ஆக்கிக் கொண்டு செயல்படத் தொடங்கின.

அதற்கு உடந்தையாக சங்கங்களும் சமாசமும் நலன் விரும்பிகளும் இணைந்து புதிய அபிவிருத்தித்திட்டங்களைத்தீட்டி சங்கங்களூடாக அவற்றை நடைமுறைப் படுத்திய வேளையில்.

வடமராட்சியில் 'ஒப்பறேஷன் லிபறேஷன்' ஆரம்பமாகி செத்து மடிந்தவர்கள் போக, எஞ்சிய மக்கள் இடம் பெயர்ந்து வெவ்வேறு

இடங்களில் அகதிகளாக தஞ்சமடைந்தார்கள்.

பருத்தித்துறை சங்க கட்டடம் இருந்த இடமே இல்லாமல் போய்விட்டது. புல்டோசர் கொண்டு உடைத்து அந்த இடத்தையே தரை மட்டமாக்கி விட்டார்கள். பெறுமதிமிக்க தஸ்தாவேசுகள், பல்லாயிரம் ரூபா பெறுமதியான பனை மூலவள உற்பத்திப் பொருட்கள் என்பன நாசமாக்கப்பட்டுவிட்டன.

ஆயிரம் அங்கத்தவர்களும் பல ஊழியர்களும் அவர் தம் குடும்பங்களும் தமது இருப்பிடங்களை தொழிலை சகலவற்றையுமே இழந்து எங்கெங்கோ இருந்து வாடி வதங்கி தவித்து தவிக்கிறார்கள். பருத்தித்துறைக்கு மட்டுந்தான் இக்கதியா? கட்டைவேலி சங்கத்தின் 1500 அங்கத்தவர்களும் 100 ஊழியர்களும் அவர் தம் குடும்பத்தினரும் அதே கதிக்குள்ளாகி எங்கெங்கோ ஆத்தலைந்து திரிகிறார்கள்.

1987 - 6 ஆண்டின் புதிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலாதாரமே நிக்கம் வடிசாலையில் தானே இருந்தது. சங்கங்களின் மூலதனமே முற்று முழுதாக இங்கு அழித்தொழிக்கப்பட்டுவிட்டது.

பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காகிய கதையே ஞாபகத்திற்கு வருகின்றது. குரங்கு கும்பலின் கொட்டம் எப்படியோ அடங்கிப் போய் விட்டது. அந்த வரைக்கும் நிம்மதிப் பெருமூச்சு விடலாம்.

நொந்து நைந்து போய்விட்ட தமிழ் மக்களின் துயர் கொஞ்ச நஞ்சமல்ல. தெ. ப. பொ. கூ. சங்கங்கள் விரைவில் புத்துயிர் பெறும். தமிழ் மக்களின் பொருளாதார அபீட்சத்திற்கு சங்கங்கள் தம் பங்களிப்பை செவ்வனே செய்யும்.

# மருத்துவத்தில் பனை நுங்கு

பனை நுங்கை மூன்று பகுதிகளாகப் பிரித்து 3 பகுதிகளையும் மருத்துவத்தில் உபயோகிக்கலாம்

(1) நுங்குகளின் மேல்தோல்

(2) நுங்கின் சதை

(3) நுங்கின் நீர்.

நுங்கின் மேல்தோல் துவர்ப்புச் சுவை உடையது. இது அதிக உபயோகமுடையது. இதில் விட்டமின், அயன் அடங்கியிருப்பதால் இரத்தவிருத்தி உண்டாகும். கணைச்சூட்டால் ஒல்லியாக இருக்கும் சிறுவருக்கு இது நல்ல ரொனிக்.

பக்குவம் செய்தல்:- ஐந்து பலம் நுங்கின் மேற்தோலைச் சேகரித்து நிழலில் காற்றுப்பட உலர வைத்து இடித்து வஸ்திர காயம் செய்ய வேண்டும். தூளின் அளவுக்கு கால் பாகம் புளியங்கொட்டையின் மேல் தோலும் அரைக் கால் பாகம் கடுக்காயின் மேல் தோலும் இடித்து வஸ்திரகாயம் செய்து நுங்கின் மேல் தோல் தூளுடன் கலந்து தேவையான அளவு பனை வெல்லம் காய்ச்சி அதில் இந்தக் கலவைத் தூளைக் கொட்டி கலந்து கிண்டி. தேவைக்கேற்ற நெய் விட்டு லேகிய பதத்தில் எடுத்து வாயகன்ற போத்தலில் பத்திரப் படுத்துங்கள். காலை. மாலை, கழற்சிக் காயளவு உண்டு வாருங்கள். தேகம் பருக்கும். உடல் சுறுசுறுப்படையும். சோகை வியாதி குணமாகும். இருதய நோய் உள்ளவர்க்கு இது நல்ல ரொனிக் ஊனைச்சுற்றி தொற்று நோய் பரவினால் (காலரா) டைபாயிட், இன்புளுவன்சா) இவ் லேகியத்தை உண்ண தொற்று நோய் ஏற்படாது.

தினசரி காலை 3 நுங்கின் சதைகளை உண்டு வந்தால் வயிற்றுக் கோளாறுகள் மறையும். மலச் சிக்கல், மூலாதாரச்சூடு, மலம் இறுகிக் கருகி வரும் கஷ்டம், மூலக் கடுப்பு உஷ்ணம் காரணமான வயிற்றிரைச்சல், வயிற்றிலுள்ள வாயு முதலியன தீரும்.

நுங்கின் நீர் பல நோய்களைக் கண்டிக்கும். இதைத் தனியாகவும் உண்டுவரலாம். கால்படி நுங்குநீர் வீசம்படி எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் நன்றாகக் கலந்து அடுப்பில் சூடாக்கி பாதி அளவாக வற்றும்படி காய்ச்சுங்கள். கீழ்க்காய் நெல்லியின் சலமூலச் சூரணம் இரண்டு பலம் போட்டுக் கிண்டுங்கள். தேன், நெய் சேர்த்து லேகியமாக்கி உண்டு வாருங்கள். கண் ஒளி பெறும். ஞாபக சக்தி அதிகரிக்கும். புதுரத்தம் சுரந்து, உடலும் மனமும் சுறுசுறுப் படையும்.

# நகை (சுவை)

**தந்தை:** இந்த ஆண்டு பரீட்சையில் 42ம் பிள்ளையாக வந்திருக்கிறியே. ஏன்......?

**மகன்:** அதற்கு மேல் வகுப்பில் பிள்ளைகள் இல்லையப்பா.

**தந்தை:** .........!

卐 卐 卐

**பத்திரிகை ஆசிரியர்:** ஏன் சார் கதை எழுதிய தாளிலை மண்ணைப்பூசி வைத்திருக்கிறீர்களே?

**எழுத்தாளர்:** கதையில் எம் நாட்டு மண்வாசனை வீச வேண்டாமா?

**ப. ஆசிரியர்:** .........!

卐 卐 卐

**ஆசிரியர்?** எங்கே உனக்குத் தெரிந்த ஒரு குறள் சொல் பார்ப்போம்.

**மாணவன்:** "செல்லினால் பட்டபுண் ஆறும் ஆறாது சொல்லினால் சுட்ட வடு"

**ஆசிரியர்:** .........!

— வாசன்


"தொழில்"

"தொழில் இழிவு இல்லை. தொழில் எதுவும் செய்யாமல் இருப்பது தான் இழிவு."

- டால்ஸ்டாய்

## தலைக்குத் தொப்பி




பள்ளிக்கூடம் போகும் பாலகர்களுக்கு பருத்தி நூலால் ஆன தொப்பி, கைக்கடக்கமானது. காசில்லாமல் கிடைப்பது.

மில்க்வைற் மாமா தருவது. 100 மில்க்வைற் நீலசோப் அல்லது 10 பார்சோப் மேலுறைகளைக்கொடுத்து அழகிய தொப்பி ஒன்றை இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

"ஆரோக்கிய வாழ்விற்கு பனைவெல்லம் சாப்பிடுங்கள்"

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

த. பெ. 77


# பனைமரமும் நம் எதிர்காலமும்

**வடஅல்வையம்பதி கனகஞானி**

பன்ன வேலைக் கைத்தொழில் எம் பிரதேசத்துக்கு மிகவும் அவசியம். கிராமப்புறமக்களன்றி நகரப்புற மக்களும் இதன் தொழில் நுட்பத்தைப் பற்றியும் இவற்றின் பயன் பற்றியும் அறிந்து தெரிந்து கொள்ள வேண்டும். படித்துவிட்டு வேலையற்று வீட்டில் முடங்கிகிடக்காது அனைத்து யுவதிகளும் முன் வந்துபன்னவேலைத்தொழிலைக்கற்க வேண்டும். படிக்காத யுவதிகளும் எந்த விதமான தாழ்வு மனப்பான்மையுமின்றி தாமாகவே முன் வந்து இத்துறையில் முன்னுக்கு வர வேண்டும், அதை நாம் ஒரு வருமானம் தரும் தொழிலாகக் கருதி நம் வாழ்க்கை இலகுவாக ஓடிட இன்றே கற்றிடுவீர் அதை நன்றே கற்றிடுவீர். இக்கைத்தொழிலை ஊக்குவிக்க பல பொது அமைப்புக்களும் கிராமங்கள் தோறும் பயிற்சியளித்து வருகின்றன.

எமது பிரதேச சிறு குடிசைக் கைத்தொழில்களோடு பன்ன வேலைத் தொழிலும் வளர வேண்டும். அவை கிராமங்கள் தோறும் தொடங்கி நடாத்தப்பட வேண்டும். அப்போதுதான் கிராமவாசிகள் பயனடைவார்கள் அத்தோடு நமது எதிர்கால பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கும் நாம் நமது தேவைகளுக்காக பிறர் கைகளை எதிர்பார்த்து ஏங்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மாறி நாம நமது காலிலேயே நிற்க ஆரம்பித்து விடுவோம்.

நம் கிராமங்களிலே அன்று தொடங்கி இன்று வரை பன்ன வேலைத் தொழில் இருந்து வருகின்றது. இதை 15 வீதமான மக்கள் தமது முழு நேரத் தொழிலாகவும் செய்து வருகின்றனர். அவைகள் வளர வேண்டும் பெருக வேண்டும். விஞ்ஞான ரீதியான புதிய தொழில் நுட்பங்களும் சாதனங்களும் இவைகளின் அபிவிருத்திக்கு உதவி வருகின்றன. அதை நாம் அறிந்து தெரிந்து பயன்படுத்த முன்வர வேண்டும் பன்னவேலைத் தொழிலோடு பதனீரைப் பயன்படுத்தி பயன் பெறவும் அனைவரும் அது தொடர்பான அறிவைப் பெறவேண்டும், பனைத்தொழில் செய்வோர் தாம் இறக்கும் பதனீர், கள் போன்றவற்றை நல்லமுறையில் பயன்படுத்தத் தெரிந்திருத்தல் வேண்டும். கள்மூலம் மனித இனத்துக்கு கேடுவிளைவிக்காத புதிய சாராய வடித்தலைப்பற்றியும் சீவல் தொழிலாளிகள் கண்டிப்பாக தெரிந்திருத்தல் வேண்டும். சங்க அனுமதியோடு சாராயம் வடிப்போர்க்

கும் தெ. ப. பொ. கூ. சங்கம் வேண்டிய உபகரணங்களை வழங்குகின்றது.

நம் நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் விஸ்வரூபமெடுத்து ஆடும் இக்காலகட்டத்திலும் எதிர்காலத்திலும் அதன் தாக்கத்தை குறைக்க வேண்டுமாயிருந்தால் நாம் யாவரும் அதற்கு இன்றே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அவ்வாறு வைப்பதாக இருந்தால் எமது கைத்தொழிலை நவீன மயப்படுத்தி அனைத்து மக்களையும் தொழில் நுட்பரீதியாக வளர்த்தெடுக்க அனைத்து தெ. ப. பொ. கூ. சங்கங்களும் முன்வர வேண்டும்.

பனைமரம் சிரமமின்றி வளரக்கூடியது. தண்ணீரோ உரமோ இட வேண்டிய அவசியமில்லை. மழை காலத்தில் குழிகளைத் தோண்டி பனை விதைகளை நாட்டினால் அவை தானாகவே வளர்ந்து வருகின்றன. பயிர்கள் ஏதும் வளராத வளர்க்க இயலாத தரிசு நிலங்களில பனைமரம் நன்றே வளரும் எனவே தேவையற்ற பயன்படாத நிலமென ஒருதுண்டு நிலத்தைக் கூட விடாது இவ்விடங்களில் பனைமரங்களை வளர்த்து நம் பிரதேசத்தின் [ஈழத்தின] வளர்ச்சிக்கு வழிகோலுவோமாக. இவைகளால் ஏற்படக் கூடிய பயன்கள் எண்ணிலடங்கா. செலவின்றி நம் பிரதேசத்தின் செல்வத்துக்கு நாமே இன்று வழிகோலுவோமாக. இன்று பொது நோககு கொண்ட தனியார்ஸ்தாபனங்களும், பொது ஸ்தாபனங்களும் இப்பணியை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பனைமரங்களின் எல்லாப் பாகங்களும் மக்களுக்கு பயன்படுகின்றன. பயனில்லாத பொருள் ஒன்றும் இதன் பாகங்களிலில்லை. ஓலைகள் வீடுமேய்வதற்கு. குருத்தோலை [சாரு] பற்பல பன்ன வேலை செய்வதற்கும் பயன்படுகின்றன.

நமது பிரதேச கிராமங்கள் தோறும் பனம் வெல்லம் காய்ச்சுவது ஒரு சிறந்த வருமானத்தைக் கொடுக்கும் தொழிலாக இருந்து வருகின்றது இதற்கு கூ. சங்கங்களின் உதவிகளோடு புதிய நவீனசாதனங்களை பயன்படுத்தினால் பற்பல நுட்பமான வெல்லக் கட்டிகளை விஞ்ஞான முறையில் கொற்றுநீக்கி தயாரிக்க முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக தெ. ப. பொ. கூ. குறிப்பிடலாம்.

நமக்கு தேவையான வெல்லத்தை நாமே உற்பத்தி செய்வோமாயின் எதிர்கால வெல்லத்துக்காக பிறநாட்டை நம்பியிராத ஒருநிலை ஏற்படும். சருப்பை உற்பத்தி செய்து சீனி தயாரித்து நமது பொருளாதாரத்தை மேம்படுதத நாமே முன்வருவோமாக.

பதனீரை சிறந்த உணவாகவும் பயன்படுத்தலாம். பதனீர் பருகுவதால் நம உடல் வளர்ச்சிக்கு தேவையானவிட்டமின்களை பெறுகின்றோம். இந்தியாவின் தேசபிதா அண்ணல் காந்தியடிகளே இதன்பயன் பற்றி கூறியிருக்கின்றார். அடுத்து பட்ட பனை கூட மரங்களுக்காகவும் விறகுக்காகவும் பயன்படுகின்றது. எனவே நம் எதிர்கால வாழ்வை வளம் பெறச் செய்ய கற்பகதருவின் அறபுத பயன்களை கற்றறிவோமாக.



# உடற்பயிற்சி அளிக்கும் எந்திர மனிதன்

ஒருவருடைய உடல் மற்றும் மன நிலை பற்றிய விபரங்களை எந்திர மனிதனுக்குள் செலுத்தியவுடன் சில நிமிடங்களில் அவருக்குத் தேவையான உடற்பயிற்சி விபரங்களை அது அச்சிட்டுத் தந்து விடுகிறது.

பல்வேறு வயதினரான, பல்வேறு தொழில் புரிபவர்களான மக்கள் அனைவருக்கும் உடற் பயிற்சி அவசியம் என்பது கொள்கை அளவிலும் நடைமுறையிலும் நிருபணமான ஒன்று. மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு விளையாட்டும், உடற் பயிற்சியும் பெரிதும் உதவுகின்றன என்று மாஸ்கோவில் உள்ள கேசிய உடற் பயிற்சி கல்வி ஆராய்ச்சி நிலையம் கருதுகிறது.

மனிதகுலம் இப்போது உடலுழைப்புஅதிகம் தேவைபடாதயுகம் ஒன்றுக்குள் படிப்படியாகப் பிரவேசித்து வருகிறது. 30 வருடங்களுக்கு முன்பு இருந்தது போல் இல்லாமல் இப்போது உழைப்பு மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. மேலும் சோவியத் மக்கள் இப்போ முன்னைக்காட்டிலும் அதிகமாகவே உணவருந்துகின்றனர். உடலுழைப்பு எனபது மனித இயல்பாகும். எனவே இன்றைய நிலையில் அதற்கு ஒரே வழி அனைத்து மக்களும் விளையாட்டுகளிலும் உடற் பயிற்சிகளிலும் ஈடுபடுவதேயாகும் என்று இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பதேயேவ் குறிப்பிடுகின்றார். இவரது தலைமையில் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் குறித்தும், இளைஞர்களுக்கு உடறபயிற்சி அளித்தல் குறித்தும் நிபுணர்கள் ஆய்வு நடத்தி வருகின்றார்கள்.

உடற்பயிற்சிக்காக ஒவ்வொருவரும் அவரவர்க்கு ஏற்ற வகையில் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ள வேண்டுமென பதேயேவ் கூறுகிறார். மருத்துவ நிபுணர்கள் ஆசிரியர்கள், உளவியலாளர்கள் உயிர்ரசாயன இயல்வல்லுனர்கள். உடற்கூறுஇயல்நிபுணர்கள், ஆகியவர்களின் ஒத்துழைப்புடன் இந்த ஆராய்ச்சி நிலையம் ஒவ்வொருவருக்கும் அவரவர் உடல் திறனுக்கேற்ற வகையில் உடற் பயிற்சி செய்யும் நேரம் பயிற்சியின் தீவிரத் தன்மை குறித்து சில விதிகளை உருவாக்கிஉள்ளது பொதுப் பள்ளிகளிலும், ஆரோக்கிய நிலையங்களிலும் உள்ள உடற்பயிற்சி ஆசிரியர்கள் இந்த விதிகளின் படியே பயிற்சி அளிக்கிறார்கள்.

இதன்படி 3 முதல் 4 வயதுக் குழந்தைகள் வாரத்துக்கு 14—16 மணிநேரமும், 11முதல் 14வயதுள்

ளவர்கள் வாரத்துக்கு 10 – 11 மணி நேரமும், 15முதல் 17வயது வரையுள்ளவர்கள் வாரத்துக்கு 6 – 8 மணி நேரமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என சோவியத் ஆராய்ச்சியாளர்கள் வகுத்துள்ளனர். இந்த ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த ஊழியர்கள், தொழிற்சாலைகள், அரச மற்றும் கூட்டுப்பண்ணைகள், அலுவலகங்கள், ஆகியவற்றில் உள்ள விளையாட்டுக் கூடங்களுக்கும், கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் உள்ள உடற்பயிற்சி வகுப்புகளுக்கும் சென்று கலந்து தக்க ஆலோசனைகள் வழங்குகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் தேவையான உடற்பயிற்சியின் அளவை இந்த ஆராய்ச்சி நிலையம் விஞ்ஞானிகள் மற்றும் கம்பியூட்டர் பொறியியலாளர்களின் உதவியுடன் கணக்கிடுகிறது

சோவியத் யூனியனில் இருதய நோயால இறப்பவர் எண்ணிக்கை 4 சத வீதமாக குறைந்திருக்கிறது. அனைத்து மக்களுக்கான விளையாட்டுப் பயிற்சிகளும், உடற்பயிற்சிகளும் தீவிரமாக வளர்ச்சி அடைந்திருப்பதே இதற்கு காரணம் என சோவியத் நிபுணர்கள் கருதுகின்றனர். இன்று சோவியத் நாட்டில் சுமார் 9 கோடியே 40 லட்சம் மக்கள் முறையாக விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். பயிற்சி அளிப்பதற்காக 350,000 உடற்பயிற்சி ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நாடு முழுவதிலும் 640,000 விளையாட்டுக் கூட்டங்கள் பயிற்சியகங்கள் இருக்கின்றன.

உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாமலேயே, கம்பியூட்டர் உதவியுடன் பயிற்சி அளிப்பதற்கு இந்த ஆராய்ச்சி நிலையம் திட்டமிட்டு வருகிறது. இதற்காக விசேட "எந்திர மனிதர்கள்" (ரோபோக்கள்) உருவாக்கப்படுகிறார்கள். ஒருவருடைய உடல் மற்றும் மன நிலை பற்றிய விவரங்களை இந்த "ரோபோக்களுக்குள்" செலுத்தியவுடன் சில நிமிடங்களில் அவருக்குத் தேவையான உடற்பயிற்சி விவரங்களை அது அச்சிட்டுத் தந்து விடுகிறது. இது போன்ற ரோபோ நிலையங்கள் ஏற்கெனவே சில இடங்களில் செயல்பட்டு வருகின்றன. சோவியத் நாட்டில் விளையாட்டு ஆராய்ச்சித்துறை மிக முன்னேறியுள்ளது.

— தருபவர்: கே. கணேஷ்

---

### மரணத்தை தழுவும் குழந்தைகள்

இன்றைய உலகில் தினமும் சுமார் 40,000 குழந்தைகள் தொற்று நோய்களாலும் சத்துப் பற்றாக்குறை கோளாறுகளாலும் இறக்கின்றனர். இதை நிச்சயமாகத் தடுக்க முடியும் என்பதை நினைக்கும்போது நமது மனிதகுலமே வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையிலுள்ளது.





## கொஞ்சம் மெல்ல . . . !

கட்டிய வீட்டைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திணைக்களத்தில் நாலாயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றிருந்தார் தர்மலிங்கத்தார். அவருக்குப் பிணையாளியாகக் கையெழுத்திட்டிருந்தார் வேதநாயகம்.

வருடங்கள் பல ஓடிவிட்டன. தர்மலிங்கத்தாருக்குத் தான் பட்டகடனின் நினைவே இல்லாது மறந்து போய் விட்டது. வேதநாயகத்தாரும் தான் பிணை நின்றதை மறந்தே போய்விட்டார். கடனும் கட்டி முடிந்தபாடில்லை. அடிக்கடி கடிதங்கள் கடனைக் கட்டுமாறு வரத் தொடங்கின. ஆனால் அவர்கள் அக்கடிதங்களை லட்சியம் செய்யவே இல்லை. ஒரு நாள் நீதிமன்றத்திலிருந்து கட்டளை வந்த போது தான் தர்மலிங்கத்தார் விழித்தார்.

ஆனாலும் என்ன! கட்டிய வீட்டை மகளுக்குச் சீதனம் கொடுத்து விட்டார் தானே. அதனால் அவர் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. நீதிமன்றத்தில் "நீர் வீடமைப்புக் கடன் பெற்றது உண்மையா?" என்று கேட்கப்பட்டது.

"உண்மைதான் ஐயா, ஆனால் என்னால் கட்ட இயலாது. வேதநாயகம் தான் எனக்குப் பிணை நின்றவர். அவரிடம் கேளுங்கள்" என்று தர்மலிங்கத்தார் பதில் சொல்லவே வேதநாயகம் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டார்.

"நீர் இவருக்கு பிணை நின்றுள்ளீர். உண்மைதானா", என்று நீதிபதி கேட்டார்.

"உண்மைதான் பிரபு, ஆனால் நான் கையெழுத்தை மெதுவாகவே வைத்தனான். இவ்வளவு காலத்துக்குள் அது மங்கி விட்டிருக்கும்", என்று வேதநாயகம் கூறவே நீதிமன்றம் சிரிப்பினால் அதிர்ந்தது.

---

## கிழக்கே போன ஆந்தை

ஒரு நாள் ஓர் ஆந்தை ஒரு புறாவைச் சந்தித்தது. "எங்கே போய்க் கொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டது புறா. "நான் கிழக்குச் சீமைக்குப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றது ஆந்தை.

"ஏன்? அங்கே என்ன விசேஷம்?"

"இங்கே உள்ளவர்கள் எல்லோருமே என் குரலைக் கேட்டு என்னை வெறுக்கிறார்கள். அதனால்தான் கிழக்கே போகிறேன்."

"உன் குரலை உன்னால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் கிழக்கே உள்ள மக்களும் வெறுக்கத்தான் செய்வார்கள்," என்றது புறா.

—லியூ ஸியாங்

## கல்விக்கு உவமை

பிங்பிரபு தம்மிடம் ஆதரவு பெற்று வாழ்ந்து வரும் கண் பார்வை இல்லாத ஷி குவாங் என்ற சங்கீத வித்வானை நோக்கி "எனக்கு வயது எழுபது ஆகிவிட்டது- புத்தகங்கள் படிக்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவோ ஆசை. ஆனால் காலம் கடந்து விட்டதே' என்று சொன்னார்.

"அப்படியானால் ஒரு மெழுகு வர்த்தியை வைத்துக் கொள்ளலாமே" என்றார் வித்துவான்.

"என்னைப் பார்த்துக் கேலியா செய்கிறீர்" என்று கோபமாக கேட்டார் பிரபு. அதற்குக் குருட்டு வித்துவான் சொன்னார்:-

"ஒருவன் வாலிபத்தில் கற்க விரும்பினால், அவனுடைய எதிர் காலம் காலை வெய்யிலைபோல் பிரகாசமாக இருக்கும். நடுவயதில் கற்கத் தொடங்கினால் அதுமத்திய மான வெய்யிலைப் போன்றது. வயதான பிறகு படிக்க ஆரம்பித்தால் அது மெழுகுவர்த்தியின் வெளிச்சம் மாதிரி. மெழுகு வர்த்தியின் வெளிச்சம் மிகவும் பிரகாசமாக இல்லா விட்டாலும் இருட்டில் தடவிக் கொண்டிருப்பதைவிட எவ்வளவோ மேல் அல்லவா?"

—சீனக் குட்டிக்கதை

---

## "பசி"க்கு பத்தாயிரம் கோடி "பலி"க்குப் பன்னிரண்டு லட்சம் கோடி!

உலகம் இன்று எங்கே செல்கின்றது. அண்மையில் நடாத்தப்பட்ட இராணுவச் செலவு பற்றிய ஆய்வு ஒன்று பயங்கரமான உண்மை ஒன்றைத் தெளிவாக்கியுள்ளது. மனித உயிர்களின் பசியைப் போக்குவதிலும் பார்க்க மனித உயிர்களின் அழிவுக்காகச் செலவிடும் பணம் பன்மடங்கு அதிகரித்து வருகின்றது. சுவீடன் நாட்டில் இடம் பெற்ற சமாதான ஆராய்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்கள் அதிர்ச்சி அளிப்பன.

1985 ம் ஆண்டு உலக இராணுவச் செலவு 12 லட்சம் கோடி ரூபாவாக அதிகரித்துவிட்டது. உலகில் பத்துக் கோடி பேர் ஆயுத உற்பத்தித்துறைகளில் ஈடுபட்டுள்ளனர், உலகின் ஐம்பது கோடி மக்கள் பட்டினியால் துடிக்கின்றனர். பத்தாயிரம் கோடி ரூபாவை இதற்கென ஒதுக்கினால் அவர்களின் பசியைப் போக்கி விடலாம். ஆனால் மனித உயிர்களைப் 'பலி' கொள்ளக் கங்கணம்கட்டிக் கொண்டிருக்கும் 'இராணுவ' சாத்தான்கள் இதற்கு வழி விடுவார்களா?



## அபிவிருத்தித் திட்டம் 1987 யாருக்காக?

— 3 —

### பனங்கற்கண்டு, பனஞ் சீனி உற்பத்திகள்

பனங் கற்கண்டு உற்பத்தி நவீனமயப் படுத்தப் பட்டுள்ளது எனலாம். இந்த வகையில் குடாநாட்டின் மருத்துவத் தேவைக்கான உற்பத்திகளில் கணிசமான அளவு (ஒருதொன் உற்பத்தியினை) இப் பருவ காலத்தில் உற்பத்திமேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. பனஞ் சீனியினைப் பொறுத்த வரையில் குடாநாட்டில் ஏற்படும் பொருளாதார உணவுத் தட்டுப்பாட்டு காலங்களில் சிறு குழந்தைகளுக்கும், சிறுவர்கட்கும் வழங்கும் வகையிலாவது தன்னிறைவினை நோக்கி உற்பத்தி நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

1-8-87 முதல் கொள் விலை லீற்றர் - ரூ 4.00 31-1-88 வரை விற்பனை விலை லீற்றர் - ரூ 6.50 ஆகும். மேற்குறிப்பிட்ட நிர்மாணங்களுடன் பனைத்தொழில் வல்லுனர்களின் ஒற்றுமை சமூக அபிவிருத்திகளிலும் கவனம் செலுத்தப் படுகின்றது. அந்த வகையில் சிறுவர் கல்வி, முதியோர் கல்வி, இளைஞர்களுக்கான கைப்பணிப்பயிற்சி யுவதிகளுக்கான தொழிற்பயிற்சிகள், சிறு சேமிப்புத் திட்டங்கள் கூட்டுறவுபண்ணைகளை அரச நிலங்களில் அமைத்தல் போன்ற பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போது அதனால் பெறும் நன்மைகள் யாவும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றது மேலே குறிப்பிட்ட சகல அம்சங்களையும்

---

வி. ஜீ. தங்கவேல்
துணைத்தலைவர் திட்டமிடல் குழு

---

**விலைக்கொள்கை:**

திட்டமிடலின் அடிஅத்திவாரமான விலைக்கொள்கை பின்வருமாறு நிச்சயிக்கப்பட்டுள்ளது. சகல சங்கங்களின் எல்லைப்பரப்பிலும் தென்னங்கள்— கொள் விலை — லீற்றர் ரூ 4.50 விற்பனை விலை லீற்றர்- ரூ 6.50 பனங்கள் 1-2-87 முதல் கொள்விலை லீற்றர்- ரூ 2.50 31-7-87 வரை விற்பனை விலை லீற்றர்- ரூ 5.50

நடைமுறையில் நின்று ஒருவர் சிந்திப்பாராயின் ஆரம்பத்தில் கூறப்பட்ட சகல கேள்விகட்கும் பதில் கிடைத்துவிடும். பூரணமாகத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் போது ஏற்படும் நன்மைகளையும் அதன் மூலம் பெறும் பொருளாதார நன்மைகளையும் நிரைப்படுத்துவோமாயின் அவை யாவன—

1 தொழிலாளர்களினால் வழங்கப்படும் கள், பதனீர் ஆகிய

உற்பத்திப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட விலை உறுதி செய்யப்பட்டுள்ளது.

2 விற்பனை செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்களுக்கு மட்டும் விலை கொடுத்தும் மேலதிகமானவற்றுக்கு அகற்றலும், குறைந்த விலையும் கொடுக்கின்ற நடைமுறைகளை மாற்றி வழங்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் யாவற்றுக்கும் விலை கொடுப்பது உறுதியாக்கப் பட்டுள்ளது.

3 தொழிலாளர்களுக்கு இது வரை காலமும் மட்டுப் படுத்தப் பட்ட வகையில் ஒரு மரம் 1½ ஒன்றரை மரம் கொடுத்த நிலையினை மாற்றி தொழிலாளியின் வலுவுக்கு ஏற்ப எவ்வளவு மரமும் தொழில் செய்ய எவ்வளவு உற்பத்திப் பொருட்களையும் வழங்க (கள், பதனீர்) வழிசமைக்கப் பட்டுள்ளது.

4 இது வரை காலமும் மாதாந்தம் 1000ரூபா தொடக்கம் 1500 ரூபா உழைத்த சராசரி தொழிலாளி இத் திட்டத்தின் அடிப்படையில் ஏறக்குறைய 5000 ரூபா தொடக்கம் 6000 ரூபா வரை பெறக்கூடியதாக இருக்கும்.

5 பொருளாதார மேம்பாடு பெற்ற தொழிலாளர்கள் சேமிப்பை அதிகரிப் பதன் மூலம் இது வரை காலமும் அல்லல் பட்ட சமூக ஒடுக்கு முறைக் காரணிகளில் இருந்து விடுதலை பெறுவதற்கு ஏதுவாகின்றது. (உ+ம்) நிலமில்லாதவர் நிலம் பெறவும் வீடு இல்லாதவர் வீடு அமைக்கவும் மின்சார வசதி பெறுதவர்கள் மின்சார வசதி பெறவும் ஏனைய அபிவிருத்திகளை அமைத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இது வரை காலமும் தொழிலாளர்கள் பெற்ற வருவாயினை விடத் திட்டம் அமுல் படுத்தப் படும் போது மேலதிகமாக ஏறக்குறைய 120 இலட்சம் ரூபா முயற்சியுள்ள தொழிலாளர்களைச் சென்றடையக் கூடியதாகும்.

இந்நிலையில் இத்திட்டம் யாருக்காக என்ற கேள்விக்கு சுலபமாக விடை பகர்கின்றது. யாருக்காக இத்திட்டம்? முற்று முழுதாக பனைமரத்தினை நம்பி வாழ்ந்து காலங் காலமாக வறுமையில் உழன்று கொண்டிருந்த ஏழைத் தொழிலாளர்களுக்குத்தான் அவர்களின் வளர்ச்சிக்காகத் தான் இத் திட்டம் என்பதை யாவரும் உணர்ந்து திட்டத்தின் பூரண நடைமுறைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டி விடை பெறுகின்றோம்.

(முற்றும்)



# ஈழத்தல் இருந்து தமிழகம் வரை...

## 14

தமிழகத்தின் பல் வேறு பகுதிகளிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், பனைவளம் மிகுந்தும், பனைவளத் தொழிற்துறை விருத்தி அடைந்தும் விளங்குவதை எனது தமிழக விஜயத்தின் மூலம் நேரில் கண்டு கொள்ள முடிந்தது. அப்போதைய தமிழ் நாடு கிராமிய தொழில் வளத்துறை அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி பனைவள அபிவிருத்தியில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை அவர் எனது விஜயத்தில் காட்டிய அக்கறையிலிருந்து தெரிந்து கொண்டேன்.

ஆய்வுச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு நானும், என்னுடன் வந்திருந்த தமிழக அரசு அதிகாரிகளும், பனைவள நிபுணர் திரு கே. சம்பந்தம் அவர்களும் சென்னையைவந்து அடைந்ததும் அமைச்சர் திருமதி. விஜயலட்சுமி பழனிச்சாமி என்னைச் சந்திப்பதற்குக் காத்திருப்பதாகத் தகவல் கிடைத்திருந்தது. அமைச்சரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நிகழ்ந்த இச் சந்திப்பின் போது தமிழக அரசு பிரதம நிர்வாக அதிகாரி திரு சீ. என். கிருஷ்ணபாரதி, தமிழ் நாடு அரசு பாம்கர் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையப் பிரதம இயக்குனர் திரு. முனுசாமி, இணை இயக்குனர் திரு. சி. பட்டாபிராமன், அமைச்சரின் கணவர் திரு. பழனிச்சாமி, பனைவள நிபுண திரு. கே. சம்பந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

இலங்கையின் பனைவளம், அபிவிருத்தி, பனைத் தொழிற் துறைகள் பற்றி அமைச்சர் என்னிடம் விபரமாகக் கேட்டறிந்து கொண்டார். எமது பனைவளம் அடைந்துள்ள துரித வளர்ச்சி, உற்பத்திகளில் அடைந்துள்ள அபரிமித

க, நடராசா
தலைவர், பனை அபிவிருத்திச் சபை

முன்னேற்றம் பற்றி அமைச்சரிடம் பெருமையுடன் விபரித்தேன். தெங்கு— பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளைப்பற்றி உன்னிப்பாகக் கேட்டறிந்த அமைச்சர் பனைத் தொழிலாளர்களின் சேவேபாயத்திற்கு மட்டுமல்லாமல் தொழிலாளர்களின் குடும்ப எதிர்கால நல்வாழ்விற்கும் உத்தரவாதம் அளிக்கும் பல்வேறு நிதியுதவித் திட்டங்களையும் எமது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்படுத்தி வருவதை அறிந்து வியப்பு அடைந்தார்.

தமிழ் நாட்டில் பனைவளத் தொழிற்துறை அபரிமித முன்னேற்றம் கண்டுள்ளதை நான்

வெளிப்படையாக அமைச்சரிடம் எடுத்துரைத்த போது அவர் மகிழ்ச்சியடைந்தார். அங்கு ஆராய்ச்சி அபிவிருத்தி வேலைகள் முன்னேற்றம்பெற்றுள்ளன. இலங்கையுடன் ஒப்பிடும் போது இத் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளோம் என்பதை ஒப்புக் கொண்டவையாக வேண்டும். ஆராய்ச்சி வசதிகள், நவீன மயப்படுத்தலை நாம் மேற்கொள்ள வேண்டும்.

அமைச்சர் ஈழத்திலிருந்து பகிலைந்து பயிர்சியாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைத்து அறுமாத காலப் பயிற்சி அளிப்பதற்கு ஒப்புக்கொண்டார். இப்போது அவர் அமைச்சர் பதவியில் இல்லை எனினும் ஈழத்திலிருந்து தமிழகத்திற்குப் பனைத் தொழில் பயிற்சிக்கென பயிற்சியாளர்களை அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டில் தமிழ் நாடு மாநில பனைவெல்லக் கூட்டுறவு இணையம் பனைத்தொழிலைப் பரப்புவதிலும், வளர்ச்சி அமையச் செய்வதிலும் சிறப்பான கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றது. இதற்குத் தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அகில இந்தியக் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமும், தமிழக அரசிடமும் நிதி உதவிகளைப் பெற்று ஊக்கமளித்து வருகின்றது.

உலகத்திலுள்ள ஆயிரத்திற்கும் மற்பட்ட பனை இன மரங்களில் இந்தியாவில் அதிகமாக ர்வது பனைமரமாகும். இந்தியாவிலுள்ள பனைமரங்களின் எண்ணிக்கை சுமார் ஆறுகோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் நான்கு கோடி பனைமரங்கள் தமிழகத்தின் நிரந்தரச் செல்வமாகத் திகழ்கின்றன.

தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையம் என்ற மாநிலக் கூட்டுறவு அமைப்பு 1958 ம் ஆண்டு மாநிலம் முழுவதும் பரப்பெல்லையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்புக்குள் தமிழ்நாட்டிலுள்ள ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், உறுப்பினர்களாக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான ஊழியர்களையும். ஆந்திரம், கேரளம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் உள்ள பனைத்தொழில் பிரிவுகளுக்குத் தேவையான ஊழியர்களையும், தென் ஆற்காடு மாவட்டம் கடலூரிலுள்ள மண்டல பனைப் பொருள் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கிறது.

இங்கும் பனை அபிவிருத்திச் சபை பனைத்தொழில்துறைப் பயிற்சிகளைக் கிராம மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் அளித்துவருகின்றது.

எனது தமிழக விஜயத்தின்போது இங்கும், அங்கும்பனைத் தொழில் துறை அபிவிருத்தி, பனைவள முன்னேற்றம் பற்றி ஒப்பீட்டு நோக்கை என்னால் மேற்கொள்ள முடிந்ததோடு நிறைந்த அனுபவங்களையும் பெற முடிந்தது. எனினும் நாம் தமிழகபனைவள அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் பின்தங்கியவர்களாக இருக்கவில்லை என்ற மனநிறைவுடன் ஈழம் திரும்பினேன்.

(முற்றும்)



# விடாய்கள்

படித்து விட்டு உத்தியோகத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான் அந்தக்கிராமிய வாலிபன். ஒரு பொருத்தமான உத்தியோகம் வரும் வரைக்கும் வீண்பொழுது போக்கவிரும்பாமல் தோட்டவேலையில் ஈடுபட்டு அதனால் நல்லபயனையும் உடல் நலனையும் பெறுகின்றான்.

தனது அன்றைய தோட்ட வரும்படிகளைவிற்கவும் வீட்டுப் பொருட்கள் சிலவற்றை வாங்கவும் தனது கிராமத்திலிருந்து

தென்மட்டுவில்
சி. சதாசிவம்

சாவகச்சேரிச் சந்தையை நோக்கிச் செல்கிறான் அந்த இளைஞன். அண்மையிற் தான் விவாகம் முடிந்த அவனது அருமை மனைவி அன்புடன் விழியால் மொழிபேசி அனுப்பி வைக்கின்றாள் அவனை.

கச்சாய்க் கடலின் இதமான குளிர்காற்று சேட்டுப்போடாத அவனது வெற்றுடலை இதமாக வருடிவிடுகின்றது. பறவையினம் காலைக் கதிரவனை வரவேற்கப் போலும் திருப்பள்ளிஎழுச்சி பாட ஆரம்பித்துவிட்டன. அப்பால் புங்கடிப்பிள்ளையாரின் காலைப் பூசை மணியோசை ஓங்கார நாதமெழுப்பிக் கணீரென்ற ஓசையுடன் அந்தக் கிராமமெங்கும்வியாபித்துக் காற்றிற் கலந்து கரைகிறது. உழைப்பிலே சற்றும் தளராத. வெறும் மணற்பூமியாகிய அந்தக் கிராமத்தையே தமது விடாமுயற்சியினால் பொன் கொழிக்கும் ஒரு பூமியாக மாற்றிய பல தோட்டக்காரர்களுக்கு இந்த மணியோசை தமது அன்றாட கடமைகளை ஆரம்பிப்பதற்கு ஒரு உந்து விசையாக அமைகின்றது.




புங்கடிப் பிள்ளையாரை மானசீகமாக வணங்கிவிட்டு அவன் தனது சயிக்கிளை வேகமாகச் செலுத்துகின்றான்.

தோட்ட வேலைகளில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும் அவனுக்கு வாசிப்பில் இருந்த ஆர்வம் குறையவில்லை. படிக்கும் காலங்களிற் கூட அவனுக்கு தமிழ், இலக்கியப் பாடங்கள் என்றால் உயிர். பாட நூலில் உள்ள தமிழ்ப் பாடல்களிலே அவனுக்குப் பொருள் விளங்காத

பல பாடல்களைக் கூட அவற்றின் இனிமையான ஓசைக்காகவே கண்ணை மூடிக் கொண்டு பாடமாக்கி விடுவான்.

ஓய்வு நேரங்களிற் பத்திரிகை வாசிப்பதும், அவற்றிற்கு எழுதுவதும் ஒரு இதமான பொழுது போக்கு அவனுக்கு. வாசிப்பில் அவனுக்கு ஒரு பேராசை (இல்லை அங்கலாய்ப்பு என்றே கூறிவிடலாம்). மற்றவர்கள் வாசித்தவுடன் வெற்றிலை போடுவது போலவோ அல்லது புகைப்பதுபோலவோ அவனுக்கு வாசிப்பு ஆகிவிட்டது. இவற்றினால் அவனுக்கு மிகுந்த சிரமமும் அதிக பணச்செலவுதான். என்றாலும் தனது ஆக்கங்களைப் பத்திரிகையிற் காணும் போது ஒரு மனத்திருப்தி பணவருவாயேதும் இல்லா விட்டாலும் சளைக்காமல் தொடர்ந்து செய்கின்றான்.

புத்தம் புதிய மினுமினுத்த நீல நிறக்கத்தரிக் காய்கள், வெள்ளைப்பாம்பு போல நீண்டு பருத்த புடோலங்காய்கள் பச்சைப்பசேலன வாயினை ஊறவைக்கும் வெள்ளரிப் பிஞ்சுகள் - இவைதான் அவன் சந்தையில் விற்ற பொருட்கள். வாங்க வேண்டிய சந்தைச்சாமான் எல்லாவற்றையும் வாங்கி ஒரு பெரிய கடகத்திற் போட்டு சயிக்கிள் பின் கரியரிற் கட்டி விட்டு வீடு செல்ல ஆயத்தமாகின்றான்.

'ஒரு பிளேயின் ரீ குடிப்பம்' என்று நினைத்து சந்தைக்குச் சிறிது தூரத்திலுள்ள 'சிறீ வள்ளி கபே'யை நோக்கிச் செல்கிறான் அதற்கு முன்னர் வளர்மதி ஒரு பிரதி வாங்குவதற்காகத் தன்னிடமுள்ள மிச்சக்காசை எண்ணிப் பார்க்கின்றான். சில்லறைகள் எல்லாவற்றையும் சேர்த்து இரண்டு ரூபா மாத்திரம் இருக்கின்றது. வளர்மதியின் விலையும் இரண்டு ரூபாய் தான். வளர்மதியென்பது ஈழத்தின் தலை சிறந்த ஒரு கலை, இலக்கிய மாத சஞ்சிகை. பணம் மட்டுமட்டாக இருப்பதனால் தனது பிளேயின் ரீ ஆசையைத் தியாகம் செய்து அவ்வூர் நகரசபைப் பொது நூலகம் இலவசமாக வழங்கும் வடிகட்டிய சுத்தமான குளிர்ந்த நீரினால் தனது விடாயைத் தணித்துக் கொண்டு வளர்மதி இதழில் ஒன்று வாங்கினான். நூலகத்தில் பத்திரிகைகளை மேலோட்டமாக ஒரு பார்வை பார்த்துவிட்டு வீடு நோக்கி விரைகின்றான். பல பத்திரிகைகளை நூலகத்தில் வாசிக்கும் பழக்கமுள்ளவனாயினும் சில பத்திரிகைகளை அவற்றை ஆதரிக்க வேண்டிய அவசியம் கருதிப் பணம் கொடுத்து வாங்குவான். அவற்றிற்குச் சந்தாவும் கட்டியுள்ளார். வீடு செல்ல ஆரம்பித்ததும் அருமை மனைவியின் முகம் சுண்டி இழுக்கின்றது.

செல்லும் வழியில் கற்பனையில் மனம் அதிகம் சஞ்சரித்ததனால் ஏற்பட்ட கவனக்குறைவினால் சயிக்கிளின் முன்சில்லிற்கு ஒரு கல்லு இடித்ததிற் காற்றுப்போய் விட்டது. சயிக்கிளை உருட்டிக்



கொண்டு செல்கின்றான். ஆலடியில் ஆரம்பிக்கும் அறுகம்புல் வெளி விரிந்து பரந்து கிடக்கின்றது நெல்வயல்களெல்லாம் அவ்வூர் மக்களின் பண்பட்ட இதயத்தைப் போல தங்கநிற நெற்கதிர்களால் பொலிந்து நிறைந்து வழிகின்றன.

செழித்து வளரும் பயிர்களைப் பார்த்தால் அவனுக்கு மிகவும் சந்தோசமாகவிருக்கும். அது யாருடையதாயினும் சரி, அது அவனுடைய பகைவனுடையதாயினும் அதில் அவனுக்கு ஒரு ஆசையுண்டாதல் தவிர்க்க முடியாது.

அவனை எதிர்நோக்கி சயிக்கிள் கரியரில் மண்வெட்டியும் கட்டிக் கொண்டு தனது வயலில் கடவான் வெட்டி கட்டி விட்டு வந்த ஒருவர்,

"என்ன தம்பி காற்றுப்போய் விட்டதா?" என்று அன்பாக அழைக்கின்றார்.

"ஓமோம் அப்பு ஏதோ பிராக்கிலை கவனமில்லாமல் வந்திட்டன்" என்கிறான்.

உடனே அவர் தனது வேலைக்களையையும் பொருட்படுத்தாமல் தனது சயிக்கிளை நிற்பாட்டி காற்று அடித்துக்கொடுத்து உதவுகின்றார். மீண்டும் சயிக்கிலில் ஏறி மனைவியின் இனிய நினைவுகளுடன் விரைகின்றான்.

அவன் மனைவி ஓரளவு படித்தவள். நவீன நாகரீகத்திலும் ஓரளவு மோகம் உண்டு. எனினும் நன்றாக உடுத்துப்படுத்து அடிக்கடி வெளியே சென்று வீடு திரும்பாமல் வீடேகதி என்றிருப்பவள் புத்தகங்கள் வாசிப்பதிலும் ஓரளவு ஆர்வம் உண்டு. கணவன் வருவதைக்காண அவள் முகம் மலருகின்றது. கடகத்தை அவிழ்த்துப் பொருட்களை வெளியே எடுக்க எடுக்க அவளது உள்ளம் உவகையால் நிறைகின்றது. பலவகையான காய்கறிகள் அவள் கண்ணைப் பறிக்கின்றன.

"கரட் றுத்தல் என்ன விலை அத்தான்?"

"கிலோ 12/50"

"அடேயப்பா அவ்வளவு விலையா?

"கோவா என்ன விலை?"

"ரூபா 9/50"

போஞ்சி

ரூபா 10/50

எல்லாமே கடும் விலைகள் தான். என்றாலும் நல்ல தரமான பொருள் என்றால் விலை குறைவாகவா இருக்கும்? சும்மாவா தருவார்கள்? என்கிறாள் மனைவி. பின்னர் சில உடுப்பும் பாசல்களும் வந்தன. அவைகளும் விலை அதிகமானவையே. உடுப்புப் பாசல் ஒன்றை விரித்து அதனுள் இருந்து வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த இளம் சிகப்பு நிறமான சிங்கப்பூர் வூலியை தனது முழங்கையில் இறுக்கமாகச் சுற்றி நிறப்பொருத்தம் பார்த்து இள நகை புரிகின்றாள். அவன் "ரூபா 250/=" என்கிறான். உண்பதற்குச் சில தின்பண்டங்களும் இருந்தன. அவளுக்கு மிக

மகிழ்ச்சியாக இருந்தது. கடைசியாக வந்து அந்த வளர்மதி என்னும் இலக்கிய மாசிகை. அதைக் கையிலெடுத்து "இது என்ன விலை அத்தான்?" என்கிருள்

"அதிகமில்லை ரூபா இரண்டு தான்" அவன்.

"இதற்கேனத்தான் வீண் காசு கொடுத்தீர்களா?" என்கிருள் அந்தப் படித்த மனைவி.

நல்ல, படித்த, நாகரிகமான, இலக்கிய வேட்கையுள்ள, தன்னைப் போல் ஒத்த சிந்தனையுள்ள ஒரு மனைவியைப் பெற்றிருக்கிறேன் என்று இறுமாப்படைந்திருந்த அந்த இளம் கணவன் மனைவியின் இந்தக் கேள்வியினுல் அதிர்ச்சியடைந்து மலைத்து விறைத்து நிமிர்கின்ருன்.

---

## மாப்பிள்ளைச் சரக்கு

ஏழைக் குடிசையிலே
விளக்கெரியவில்லை
அடுப்பும் புகையவில்லை
இருந்தும்
தன் குமருகளின்
நெஞ்சம் எரிவதை
பொறுத்திருக்க மனமின்றி
அவர்கள்—
வாழ்க்கை இலக்கியத்தை
வளமாக்க பார்க்கின்ருர்
'மாப்பிள்ளை படலம் ஒன்று!
பாவம் அப்பா'
பட்டினியால்
துடிக்கின்ற
வயிற்றுக் கிடையிலும்
பஞ்சடைந்த
கண்களுக்கிடையிலும்
வாழ்கின்ற நமக்கு
கல்யாண சந்தையிலே
விலை பேசுகின்ற
மாப்பிள்ளை சரக்கை
வாங்க
எங்குதான் செல்வாரோ ...............

— செல்வி. சாந்தா செல்வரட்ணம்



# ஒரே பார்வையில்:
# (செல்)லாத ஒப்பந்தங்கள்!

'செல்'லரித்துப் போன சுவடிகளைக் கூடத் தொல் பொருள் ஆய்வாளர்கள் தேடிக் கண்டு பிடித்து அதற்கு வரலாறு படைத்து விடுகின்ருர்கள். ஆனல் 'செல்'லாத ஒப்பந்தங்கள் ஒரு போதும் மீண்டும் உருப்பெறுவதே இல்லை. ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணும் முகமாக 1919ம் ஆண்டிலிருந்து எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் எதுவுமே அமுல்படுத்தப்படவில்லை, அவை யாவுமே கிழித்தெறியப்பட்டு விட்டன. இதன் விளைவையே ஈழத் தமிழர்கள் இன்று அனுபவித்து வருகின்றனர். இவ்வாறு செய்து கொள்ளப்பட்ட (செல்லாத) ஒப்பந்தங்கள் பற்றி ஒரே பார்வையில் இங்கு தருகின்ருேம்:—

1919 — இதுவே முதலாவது சிங்கள – தமிழ் ஒப்பந்தம். சட்டசபைப்பிரதிநிதித்துவம் சம்பந்தமாகச் சேர் பொன். அருணசலம், திரு. ஜேம்ஸ் பீரிஸ், திரு. ஈ. ஜே. சமரவிக்கிரம ஆகியோர் ஒப்பமிட்டுச் செய்யப்பட்ட ஒப்பந்தம். பின்னர் இந்த ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது.

1925 — 'மகேந்திரா' ஒப்பந்தம். இவ் ஒப்பந்தத்திற்கும் முதலாவது ஒப்பந்தத்திற்கு நேர்ந்த கதியே.

1957 இது இலங்கை சுதந்திரமடைந்த பின் செய்யப்பட்ட ஒப்பந்தம். 'பண்டா – செல்வா ஒப்பந்தம்' என்று பிரபல்யம் பெற்றது. சில மாதங்களுக்குள் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது.

1965 'டட்லி - செல்வா' ஒப்பந்தம். இரகசிய ஒப்பந்தம் என்று எதிர்க்கட்சியினரால் அம்பலப்படுத்தப்பட்டது. 4 வருடங்களில் ஒப்பந்தம் குப்பைக் கூடைக்குள் போய்விட்டது.

1977ம் ஆண்டின் பின் ஒப்பந்தங்களில் ஈழத்தமிழர்கள் நம்பிக்கையை இழந்து விட்டனர். செல்லாத ஒப்பந்தங்களை ஏற்கத் தவறியதால் இன்று தமிழ் மக்கள் 'ஷெல்'களை எதிர்நோக்க வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

---

## கூறு ........கூறு 57-000 டாலர்கள்

புரு ஒன்று 57.000 டாலர்களுக்கு லண்டனில் விலை போயுள்ளது. லண்டனிலுள்ள புரு வளர்க்கும் நிறுவனம் ஒன்று இந்த விலை கொடுத்து அந்தப் புருவை வாங்கி உள்ளது.

இந்தப் புரு 600 மைல்கள் தொடர்ந்தாப் போல் பறக்கக் கூடியதாம்; மணிக்கு 40–50 மைல் வேகத்தில் பறக்கும்.

மத்திய இங்கிலாந்திலுள்ள ஓர் பண்ணை நிர்வாகமே இப் புருவை வாங்கியது.

# ஒரு விதவையின் நாட் குறிப்பிலிருந்து

தினக் குறிப்பேடு அன்று ஓகஸ்ட் 23 என்று காட்டிற்று. இன்று என் வாழ்வின் சோகக் கறைகள் கல்லில் பொறிக்கப்பட்டது போன்று என் இதயத்திலே பொறிக்கப்பட்ட இருள் படிந்த நாள். இன்று காலை நானும் என் கணவர் நரேசும் ஆரியகுளத்திலுள்ள எம் வீட்டிலிருந்து எம் குழந்தை திலீபனுடன் வவுனியாவிலுள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வழிபாட்டில் கலந்துகொள்வதற்காகப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தோம். அப்போது காலை 9.00 மணி இருக்கும். திடீரென எங்கோ வெடிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. வர வரக் கிட்ட கிட்ட கேட்பது போல் இருந்தது. என் குழந்தை அழப்பிடித்து விட்டான். பெரிதாகக் கதைத்தாலே திடுக்கிட்டு அழும் என் குழந்தையை அடக்க முடியவில்லை. வாடா கண்ணா, அப்பா நான் இருக்கிறேன் நீ ஒன்றுக்கும் பயப்படாதே என்று தேற்றியபடி என் கையிலிருந்த குழந்தை அவர் கைகளுக்கு மாறியது. குழந்தையை சிரிப்புக் காட்டியபடி முன் வாசலைத்திறந்த போது எமது அயல் வீட்டுக் காரர்கள் பரபரப்புடன் அவசர அவசரமாக எமதுவீட்டுக்குவந்தார்கள். எனது கணவர் தனது நகைச் சுவைப் பாணியில், ''என்ன அண்ணை ஓடுகிறியள் வவுனியாவில் சத்தம் கேட்டால் போதும் மணியண்ணர் இங்க காட்டில'' என்று கூறி சிரித்தபடி வரவேற்றார். மணியண்ணரோ ''தம்பி! இங்க பாரும் எவரோ வந்து வீடு வீடாக ஆட்களை சுட்டும் வெட்டுகிறார்களாம் எமக்குப் புரியாத பாசையிலேயும் அவர்கள் கதைக்கிறார்களாம்'' என்றார். அவர்கூறியவுடன் என் விழிகள் இரண்டும் கீழே விழுவது போல் விரிவடைய, என்

S. வலன்ரீனா

கணவர் ''இங்க பாருங்க சாந்தா படபடவென்று உடைகளை மாற்றி விட்டு குழந்தையினுடைய பால் மாவை எடுத்து bagகில் வைத்துக் கொண்டு தயாராகுங்க காட்டுக்குச்செல்லலாம்'' என்று என்னைத் தயார் படுத்தி விட்டு அவர் பக்கத்து வீட்டு அன்னமக்காவிற்கு விஷயத்தைக் கூறிவிட்டு வருவதாக சென்றார். அவர் செல்லவும் அன்னமக்காவின் குழந்தைகளின் அலறல் ஒலி எழும்பிக் கொண்டிருந்தது. நானோ ''அய்யோ அப்பா'' என்று கத்தியவாறு அவரைத் தடுக்க என் குழந்தையும் அழத் தொடங்கியது. அவர் திரும்பி வந்தபோது அவர் முகத்தில் ஈயாடவில்லை. சாந்தா பக்கத்து வீட்டில் வெட்டு விழுகிறது ஆனபடியால் நாம் இனைமேலும் இங்கே இருப்பது நல்லதல்ல என்று திறந்த வீடு பூட்ட நேரமில்லாமல் அப்படியே bag மட்டும் எடுத்துக்கொண்டு பின் வாசலால் வெளியே புறப்பட்டோம். என் கணவர் ஒரு கால் தான் படியில் இருந்து வெளியே எடுத்து வைத்தார். எங்கிருந்தோ துப்பாக்கிவேட்டுக்கள் எம்மை நோக்கி பாயத்தொடங்கின. நான் ஐயோ என்று அலறியபடி திரும்பியபோது என் கணவரின் காலில் சூடு விழுந்து விட்டது. கணவர் நிலத்தில் விழுந்துவிட்டார் அவரின் கையிலிருந்த திலீபன் கீழே விழுந்து விட்டான். நான் ஓடிச்சென்று அவரைப் பிடித்து காலைத்தொடவும் என் தலையில் காடையர்களின் கைபடவும் சரியாக இருந்தது. இரத்த வெள்ளம் ஆறாகப் பாய்ந்தபடி அவர் நிலத்தில கிடந்து கொண்டு குழந்தையை தூக்க இன்னுமொருவன் வந்து குழநதையை பறித்து இங்க பாருடா நீங்களெல்லாம் கொட்டியாதனே என்றவாறு, என் கணவருடைய கைகள் இரண்டையும் தன் கையிலுள்ள மொட்டைக் கத்தியால் சிரமப்பட்டு வெட்டினான். நானோ ஐயோ என்று வாய் திறந்தபடியே. சத்தமோ வெளியே வரவில்லை. அழ முயற்சிக்கிறேன் ஆனால் முடியவில்லை. அதற்குள் கைகள் வெட்டப்பட்ட நிலையிலும் சாந்தா குழந்தையையும் கொண்டு ஓடிவிடு என்று அழுதழுது சொல்கிறார். ஆனால் நானோ வாயில்லா ஊமையாகி விட்டேன். என் தலைமயிர்களை பிடித்திருந்தவன் அப்படியே வெட்டி விட்டான். சிறிது நேரத்தில், ஐயோ சாந்தா நான் இனி உயிரோட இருக்க மாட்டன். திலீபனை ஒருக்கால் வாங்கித்தா ஒருமுறை அவனை முத்தமிட என்று சொல்லி வாய் மூடுவதற்குள் அவரின் தலை வெட்டப்பட்டன. என் குழந்தையையும் வெட்டப்பட்ட அவர் தலைமேல் வீசி எறிந்தார்கள். என்னையும் அப்படியே அவர் மேல தள்ளிவிட்டார்கள் அவ்வளவும் தான் தெரியும் பிறகு என்ன நடந்தது என்றே தெரியாது. நான் கண் விழித்தபோது யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்தேன் அப்போது எனக்கு ஒரே வலியாக இருந்தது கையினால் காதை தொட்டுப்பார்த்தேன் என்னுடைய ஒரு காதையும மோதிரம் அணிந்திருந்த விரலையும் காணவில்லை. வேதனையுடன் ஐயோ நரேஷ் என்று அலறினேன அவ்வளவு தான் மீண்டும மயக்கம். பின் விழித்தெழுந்த போது திலீபன் அழுதவாறு என் தங்கையின் கையில் இருந்தான். இன்று என் வாழ்வில சோகக் கறை படிந்த இருளான நாள். அவரைக் கொன்ற வீணர்களைப் பழிவாங்கும் வீரமறவனாக என் குழந்தையை வளர்க்க வேண்டும் என்று எழுதிக் காணப்பட்டது,

★ குட்டிக்கதை

# குரங்காட்டியும் குரங்கும்

ஒரு குரங்காட்டி காட்டுக்குச் சென்று ஒரு குரங்கைப் பிடித்து வந்தான். அதன் அரையில் சங்கிலியால் கட்டி அதை வளர்த்து வந்தான்.

குரங்காட்டி சங்கிலியில் அதைக் கட்டின நாட்தொடக்கம் அது தன்னை அக்கட்டில் இருந்து விடுவித்துக் கொள்ள முயற்சி செய்தது. குரங்காட்டியைக் கண்டதும் பாய்ந்து நகங்களால் பிய்த்துப் பற்களால் அவனைக் கடித்துக் குதறத் துடித்துக் கொண்டிருந்தது.

யோ. பெ.

குரங்கின் அட்டகாசத்தைக் கண்ட குரங்காட்டி அதற்கு முதலில் பிரம்பால் அடித்துப் பயமுறுத்தினான்: அது அடங்கவில்லை.

‚இது ஒரு நாளைக்குச் சங்கிலியை அறுத்துக் கொண்டு போகும்' என்று அவன் யோசித்தான். அன்று தொடக்கம் குரங்கிற்கு அடிப்பதைக் குறைத்து அன்பு காட்டத் தொடங்கினான். அது சங்கிலியை அறுக்க முற்படும் போது அதன் கிட்ட வந்து தலையைத் தடவி அதன் அரையில் இறுகியுள்ள சங்கிலிக் கட்டை அவிழ்ப்பதுபோல் பாசாங்கு செய்வான். பின்பு எழுந்து "கொஞ்சம் பொறு" என்று கையால் காட்டிவிட்டுச் செல்வான்.

அவன் செய்கையில் மனம் மகிழ்ந்த குரங்கு ‘இவன் நாளைக்கு வந்து என்னை அவிழ்த்துவிடுவான், இவன் ஒரு நல்லவன்' என்று எண்ணிக் கொள்ளத் தொடங்கியது.

குரங்காட்டியும் ஒவ்வொரு நாளும் அவ்வாறு செய்துவிட்டுச் சென்று விடுவான்.

அவன் தயவில் நம்பிக்கை வைத்த குரங்கு அட்டகாசம் செய்யாமல் அமைதியாகக் கிடந்தது.

கொஞ்சக்காலம் சென்றதும் பெண்குரங்கு தன் ஆணைத்தேடி காட்டில் இருந்து வந்தது. ஆண் குரங்கு சங்கிலிக் கட்டில் அமைதியாகக் கிடப்பதைக் கண்டு விட்டு கோபத்துடன் திரும்பிச் சென்றது.

அது தனியாக வருவதைக் கண்ட குரங்குக்கூட்டம் ‘அவன் போராடுகிறானா? வாருங்கள் நாம் அவனுக்கு உதவி செய்வோம்' என்று கூறிப் புறப்பட்டது.

"பயனில்லை அது சாகும் வரை அடிமை தான்" என்றது பெண் குரங்கு.

‘ஏன்' என்றது குரங்குக் கூட்டம்.

‘அது தன் சுதந்திரத்திற்கு குரங்காட்டியின் தயவில் நம்பிக்கை வைத்து விட்டது' என்று பெண் குரங்கு சினத்துடன் கூறியது.

(நன்றி; தனிச்சொத்து)



## சட்டம் பாவம் என்ன செய்யும்?

சென்ற ஆண்டு ஏற்பட்ட மீனம்பாக்கம் விமான விபத்திற்கு காரணம் அவ்விமானத்தைச் செலுத்திய கொமாண்டரும் உடன் விமானியும் நல்ல மதுபோதையில் இருந்ததுதான் என்று பின்னர் செய்யப்பட்ட ஆய்வுகள் தெளிவு படுத்தியுள்ளன.

விபத்து நடந்து நான்கு மணி நேரத்தின் பின் அவர்களது இரத்தத்தில் செய்யப்பட்ட ஆய்வில் மதுவின் அளவு மிகக் கூடிய அளவு இருந்தது என்றால் விபத்து நடந்தபோது எவ்வளவு இருந்திருக்கவேண்டும்.

இவர்களை நம்பி கோடிக்கணக்கில் பெறுமதி வாய்ந்த விமானமும் அப்பாவிப் பிரயாணிகளின் உயிரும் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

விமானிகள் குடித்திருந்தால் அவர்கள் விமானத்தில் ஏறக் கூடாது என்பது விமானப் போக்குவரத்துச் சட்டம். படிப்பறிவுள்ள இவர்களைச் சோதித்து அனுப்ப வேண்டிய விமான நிலைய டாக்டரும் கடமையிலிருந்து தவறினால் சட்டம் பாவம் என்ன செய்யும்?.

ஜபல்பூருக்கு அருகில் துமாரியா என்ற கிராமம். அண்மையில் திருமணம் செய்த வீரசிங் என்ற பீடித் தொழிலாளி இறந்துவிடுகிறான். 25 வயதான இளம்மனைவி வைஜயந்தியும் உடன்கட்டை ஏறி இறக்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறார்கள். படிப்பறிவில்லாத அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

கே. எஸ். ஏ,

ஊர்மக்கள் இந்த நிகழ்ச்சியைத் திருவிழாப் போல் கொண்டாட, பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் பிராமணர் வந்து அவளை உடன் கட்டை ஏற்றும் சடங்கை நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள்.

உடன் கட்டை ஏறுவது கூடாது என்று சட்டம் இருக்கிறதே, பாவம் அது என்ன செய்யும்.?

சட்டத்தைப் பேண வேண்டிய பொலிஸார் என்ன செய்தனர்? வழக்கம்போல எல்லாம் முடிந்த பின் இடத்துக்குப் போய்ச் சேர்ந்தனர்.


## என்ன செய்யப் போறாள்?

தென்னம் தோட்ட நடுவில் ஒரு
பென்னம் பெரிய வீடு
அன்னம் போல ஒருத்தி – அங்கு
தன்னம் தனியே இருந்தாள். 1
கன்னம் கரிய இருளில் – வெளித்
தோன்றும் மின்னல் போலே
கன்னம் குழியச் சிரிப்பாள் – அந்தத்
தென்னந் தோட்டக் கன்னி. 2
தன்னம் பிக்கை மிக்க – அந்தத்
தென்னந் தோட்டக் கன்னி
பன்னம் பன்னமாகப் – பல
செய்து குவிக் கின்றாள், 3
கன்னித் தமிழின் அழகும் – எழில்
கன்னற் கவியின் சுவையும்
பின்னிப் பணி செய்கின்றாள் – அந்த
வண்ணத் தமிழின் செல்வி. 4
என்ன விலையுன் பன்னம் – என்ற
கேள்வி யாரும் கேட்டால்
உந்தன் மனத்தின் அளவே என்பாள் – அந்தத்
தன்னம் பிக்கை யுடைய தமிழ்க் கன்னி. 5

"சுஜா"

## குறுக்கெழுத்துப் போட்டி 3

## ரொக்கப் பரிசு ரூ 50-00



### குறுக்கெழுத்துப் போட்டி 3

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

..............................................

..............................................

ஒப்பம்

### இடமிருந்து வலம்

1. அகிலமெல்லாம் புரக்கும் சக்தி அவள் பாரதியின் பாட்டிற் பொருளானாள்.
4. பூமியின் மறுபெயர் ஆனாலும் ஒழுங்கு வேண்டும்.
5. மானைத் தேடி இவளுக வந்தார் முருகக் கடவுள்.
7. இம்மொழி போல் இனிதாவதில்லை.
10. இராமாயண காலத்தில் இலங்கையைத் தீயிட்டான்.

### மேலிருந்து கீழ்

1. பனையிலிருந்து கிடைக்கும் இதனைக் காலையில் எடடு அவுன்ஸ் அருந்தி வந்தால் ஆயுள் நீடிக்கும் ஆனல் கள் அல்ல.
2. மனைவியைக் "குறிக்கும்" ஒரு சொல். எவரையும். கவிழ்க்கவும் உதவும் என்ன பொருத்தம் இந்தப் பொருத்தம்!
11. மாவிளக்கேற்றிடும் மா.
3. தமையனின் பாதுகையைத் தலையில் சுமந்தவன்.
6. குங்குமத்தைப் பேணி வைப்பது.
8. நீதி தவறிய மகனையே கொன்றவன்.
9. ஒய்யாரக் கொண்டைக்கு உள்ளே இருப்பதுள் இதுவும் ஒன்றும்.

### நிபந்தனைகள் :

- விடைகள், தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு ஆசிரியர், 'கற்பகம்' 330, கே கே எஸ் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- பரிசு பெற்றவர் விபரம் அடுத்த மாதக் 'கற்பகம்' இதழில் வெளியிடப்படும்.
- முதற்பரிசு ரூபா 25/-. 2 ம் பரிசு ரூபா 15/-. 3 ம் பரிசு ரூபா 10/- பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும்.
- கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல. 3" எனக் குறிப்பிடல் வேண்டும்.
- எவ் விடயங்களிலும் ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
- உங்கள் விடைகளை உடனே அனுப்பிவையுங்கள்.

தொடர் நவீனம்

# உண்மையில்லாத உறவுகள்

கே.வி.என்.

தோப்புப் புலம், அது ஒரு சுந்தரமான சுவர்க்க இடம்.

வானுற வளர்ந்தோங்கி இயற்கைக்கு சாமரம் வீசிநிற்கும் தென்னைமரங்களும்,

திங்கனிமரங்களாம் தேன்தோடையும், மாவும், பலாவும், மாதுளையும் மண்டிக்கிடக்கும் அந்த இனிய பசுமையான சோலை. இடம் புகைபிரத வீதிக்கு அருகாமையிலுள்ளது.

அதன் சோலை நடுவே அந்தக் காலத்தை அனுசரித்துக் கட்டப்பட்ட அரண்மனை போன்ற பென்னம் பெரிய வீடு. வீட்டைச் சுற்றிவர நாற்புறமும் கற்பூரவள்ளியும், கமகமக்கும் மல்லிகையும், மருக்கொழுந்தும் எழுப்பும் இனிய சுகந்த நறுமணத்தை வீட்டினுள் இருந்தவாறே அனுபவித்து ஆனந்திக்கலாம்.

அந்தப்பெரிய வீட்டின் கோடிப்புறத்துச் சுவருடன் அண்டிப் போடப் பட்டிருக்கின்றது ஒத்தாப்பென்று அழைக்கப்படும் ஒதுக்கமான ஒடுக்கமான ஒரு தென்னோலைப்பத்தி.

—அது அந்தப்பெரிய வீட்டிற்கு திருஷ்டி பட்டுவிடாமலிருப்பதற்காகவோ, அல்லது பாவிப்பிற்குதவாத கழிவு பொருட்களைப் போட்டு வைப்பதற்காகவோ, போடபபட்டிருக்கும் ஒன்றாகவே தான் யாருக்கும் நினைக்கத் தோன்றும்.

ஆம், அது உண்மையே.

அந்த வீட்டிலிருந்து கழித்து கண்களிலும் படக்கூடாது என்று ஓதுக்கிவிடப்பட்ட மூன்று கிழட்டு நாய்கள் அதற்குள் கிடந்து மன அமைதியை இழந்தவர்களாய் உள்ளம் வெதும்பிக் கொண்டிருக்கின்றன.

அதில் ஒன்று அறுபது வயதிற்கும் மேற் பட்டுவிட்ட மனித நாய். அது அந்த ஒத்தாப்புக் கப்புடன் முதுகைச் சாத்தி குந்தி முடங்கி இருக்கின்றது. மற்ற நாய்கள் அல்லியும் அருச்சுனனும் ஒத்தாப்பு வாசலில் அவைகளுக்காகப் போடப்பட்டிருக்கும் சாக்கின் மேல் சுருண்டுபடுத்த வண்ணம் அந்த மனித நாயைப் பார்த்தபடி படுத்திருக்கின்றன. அந்த மூவரினதும் நிழற்படக் காட்சியை அங்கே கமழும் புகையைக் கக்கிஎரியும் மை விளக்குச் சுடர் ஒத்தாப்புக்குத் தொத்தாக நிற்கும் அந்தப் பெரிய சுவரின் மேல்படம் போட்டுக்காட்டிக் கொண்டிருக்கின்றது.

அந்த ஊமைப்படக்காட்சியில் உள்ளத்தைப் பறிகொடுத்து அதனை இமைக்காமல் பார்த்த வண்ணமிருக்கின்றது அந்த மனித நாய்.

அவர்தான் ஓல்சிலோன் முத்தையா

சன நடமாட்டம் அடங்கி சோற்று நித்திரைக்குரிய சுகமான நேரம். ஒரு மைல் தூரத்திலுள்ள பட்டணத்து வாகனதிகளின் இரைச்சல் இராட்சத மூச்சுகளாக இடையிடையே படு பயங்கரமாய்க் கேட்கின்றது. அப்போது சாக்காட்டுக் குருவியொன்று நேராக் காடு சுண்ட குரலில் பிலாக்கணம் வைத்து மிக அவசரமாக அந்த வீட்டின் மேலால் பறந்து சென்றது.

முன்பெல்லாம் இந்தக் குருவி இப்படி அபசகுனக் குரலில் கத்தி ஆளெழுப்பிச் செல்கையில் 'துப், துப், துப்' என்று மிக அவசரமாக மும்முறை சின்னப் பொறித் துப்பல்களாகத் துப்பி அந்த பீடையின் கூக்குரலுக்கு விடங்கு செய்த மனோபாவத்தில் 'சவம்' திண்டு தீர்த்தது போதாதென்று இன்னும் ஆரைக் காவு கொள்ளத்திரியிருய்?, என்று அதனைத் திட்டித் தீர்ப்பார் முத்தையா. பின்பு வாய் கொப்பளித்து விட்டு ஒரு தரம் வெற்றிலை போட்டுக் கொண்டு வெளியே வருவார். ஆனால் இன்று இப்போது, எதையுமே பொருட்படுத்தாதவராய் அந்தச்சுவரின் மேல் பெரிது பெரிதாகப் பூதாகரமான மூக்கும் முழிகளுமாகப் பிதுங்கிப் பதிந்து ஆளுகை செய்யும் அந்த நிழற்சித்திரங்களையே இமைக்காமல் பார்த்த வண்ணமிருக்கின்றார் முத்தையா.

திடீரென்று அல்லி நாய் தனது சீவி முழுவதையும் ஒன்றுகூட்டி குரைத்துக் குரலெழுப்பி ஒத்தாப்புக்கு வெளியே முகங்காட்டி ஊளையிடுகின்றது. அல்லி எடுத்துக் கொடுத்த ஊளையின் அடியைத் தொடர்ந்து பிற்பாட்டுக் காரனுக அருச்சுனன் ஊளையிட்டு இழுத்து ஆலாபனை செய்கையில் அவைகளை அதட்டி அடக்கிவிட்டு முத்தையர் செருமினுர்.

செருமல் இருமலாக வந்தது அந்த இருமல் தனித் தவில் வாசிப்பாக முத்தையரின் நெஞ்சில் கிறுதாவும், குமுக்காகவும் போட்டு அவரை உருட்டி எடுக்கையில் மீண்டும் அல்லி ஊளையிட அதைத் தொடர்ந்து அருச்சுனன் எச்சக்கில் கொண்டு போய் வைத்து அதை என்னென்னவோ செய்து ஊளையிட முத்தையர் இரும இப்படியாக அவர்களின் இந்த ஒத்தூதல் வாசிப்பு உச்சக் கட்டத்தை அடைந்தபோது,

"அடி, அம, சவங்களே, சவக் கிழட்டு நாய்களாலை பெரிய கலை யிடியாகப் போய்விட்டுது. இப்ப வந்தனெண்டால் மூண்டு சவங்களின்ரை முடிச்சையும் அறுப்பன்."

வீட்டிற்குள் கதவுகளையும், ஜன்னல்களையும் இறுகச் சாத்திக் கொண்டு படுத்திருந்த முத்தையரின் பேரன் சேனுபதி அந்த வீட்டின் வீட்டம் அதிரும்படியாக இரைந்து கத்தினுன்.

ஒரு வினுடி, பொத்தினுற்போல் தம்பிடித்து தன் இருமலை

நிறுத்திக்கொண்ட முத்தையரின் செகிட்டில் அடித்தாற்போல் சேனாபதி இரைந்து கத்தியது யாவும் வீழாது போலும் அவன் கூறிய கடைசி வசனம் காதில் பட்டது. திமிறித் திமிறி வரும் இருமலுக்கிடையே பேரன் கூறிய அந்தக் கொடூரமான கூற்றை அவர் செவிகள் முற்றாக உள்வாங்கிக் கிரகிப்பதற்குள்ளாகவே சேனாபதி மறுபடியும் இடிமுழக்கஞ் செய்தான்.

“சவங்கள், சாகிறதுக்கு இன்னும் நாள் வந்து துலையிதில்லை... உந்தக் குட்டை நாயளோடை கூட உடன் கட்டை ஏறப்போறனெண்டு நிக்குது அந்தக் கிழடு... இல்லையெண்டால் பிடிச்சுக் குடுத்த நாயளைப் பேந்து பிடிச்சு கொண்டுவந்து வைச்சு சமா வைக்குமே? சவம் நாளைக்காகட்டும் உன்னையும் சேர்த்து அந்த முனிசிப்பல் நாய் வண்டிலுக்குள்ளை பிடிச்சுப் போடுறேனோ இல்லையோவெண்டு பார்.”

பேரன் சேனாபதியின் சுடுசொற்கள் நாராயமாக வந்து காதை அறுத்து நெஞ்சை அடைந்தபோது கண்கள் குளமாகி விட்டன. வாய்விட்டு அரற்றாத குறையாக அவர் அழுதார். அந்த வேதனை தீர மனம் விட்டு, வாய் விட்டு யாருக்காவது சொல்ல வேண்டும் போன்ற தவிப்புடன் கூடிய நினைப்பு வந்தது. அப்படிச் சொன்னால்தான் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் அந்தப் பளு கொஞ்சமாவது நெஞ்சைவிட்டு இறங்கும் என்ற நினைப்பு. ஆனால் ருக்குச் சொல்வது? அவர் சொல்வதை பொறுமையுடன் யார் கேட்கப் போகிறார்கள்? அறளை பேந்த கிழவனின் அலட்டல் என்றுதான் ஆருக்கும் தோன்றும்.

அவரைப் பொறுத்தவரையில் இந்த அல்லியும், அருச்சுனனும் அப்படிப்பட்டவைகளல்ல. அவர் சொல்வதை நிட்சயம் கேட்பார்கள். கேட்டு இரண்டு வார்த்தையை ஆறுதலுக்கு வாய் திறந்து சொல்ல முடியாத குறையைத் தவிர மற்றப்படி அவர் சொல்வது அவைகளுக்குப் புரியும். அவைகள் அனுங்குவது சிணுங்குவதின் அர்த்தம் அவருக்குப் புரியும்.

முகமனுக்கு அனுதாபங்காட்டி ஆறுதல் கூறும் மனித சாதியை விட, கலங்கும் விழிகளுடன் அவர் சொல்பவற்றைக் கேட்டு அனுங்கி, அழுது தங்கள் ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்திக் காட்டும் அந்த நாய்கள் எவ்வளவோ மேல் அல்லவா. வெறும் கல்லும், இரும்பும் மனிதர் தம் துயரைச் சொல்லக் கேட்க முடியுமென்றிருந்தால் ஐயறிவு படைத்த அல்லி நாய்களால் மாத்திரம் முத்தையர் சொல்வதைக் கேட்க முடியாமல் போய் விடுமா என்ன?

முத்தையர் தனது நெஞ்சில் பொருமிய துயர நினைவுகளை அல்லிக்குச் சொல்லிக் கொண்டே ஆறுதல் பெற நினைத்தார்.

“கேட்டியோ அல்லி, அந்தக் கீழ் சாதி சொன்ன கதையை?” என்று சர்வ சாதாரணமாக மனிதருக்குக் கதை சொல்வது போலவே அந்த அல்லி நாயுடன் கதைக்கத் தொடங்கினார் முத்தையர்.

“ங்...ங்...ங்...” அல்லி நாய் அவர் கூப்பிட்டுச் சொன்னவற்றைக் கேட்டு இப்படி அனுங்கிற்று.

அல்லி அப்படி அனுங்கியபோது முத்தையரின் மனதுக்கும் அது ஆறுதலாகப் பட்டது. அப்போது அவருக்கு அவர் மனைவி அன்னப்பிள்ளையின் ஞாயகம்தான் வந்தது. நைந்துபோன உள்ளத்துடன் எப்போதாவது முத்தையர் கதைக்கத் துவங்கினால் அதற்கு அன்னப்பிள்ளை ஆறுதல் சொல்லிச் சமாளிப்பாளே. அந்த ரீதியிலேயே அல்லியின் சிணுக்கமும் அமைந்திருப்பதாக முத்தையர் கருதினார்.

“என்னெண்டாய் அல்லி?...ஓ, உனக்கும் இப்ப அறளை பேந்துதான் விட்டுது கண்டியோ.. இல்லையெண்டால் அவள் போக்காடிச்சி கதைச்சுச் சமாளிப்பாளே அந்தக் கணக்காகத்தான் நீயும் இப்ப வந்துட்டாய்... இந்தப் பெடிபெட்டையின்ரை குறை குற்றத்தைக் கதைச்சவுடனே எதை எதையோ சொல்லி எப்பிடி எப்பிடிச் சமாளித்து மழுப்பி விடுவாளெண்டும் உனக்கும் சாடையாகத் தெரியும்தானே? ... ஓ, நீயும் அவளோடை இருந்து அவள் அடுப்படி ஞாயங்களைத் தெரிஞ்சு வைச்சிருக்கிறாய் கண்டியோ. அந்தப் பழக்க தோஷம் உன்னையும் விட்டுப் போகுமே பின்னை. இதுகளைப்பற்றி நான் ஏதும் சொன்னால் கோச்சி என்ன சொல்லுறவள், எப்பிடிச் சொல்லுறவள் எண்டொருக்கா நினைச்சுப்பார் பாப்பம்...”

“ம், ம், சும்மாவிடுங்கோ. எடுத்ததுக்கெல்லாம் இப்பிடிப் பழம் சீலை கிழியிற மாதிரி புறு புறுகற கறண்டு தொணதொணத்து சீறிச் சினத்துக் கொண்டிருந்தால் இக்கணம் அதுகளுக்கும் சுனைக் கெட்டுப் போய்விடும். பேந்து அதுகளுக்கும் மூத்தவை முதியவை எண்டிற மதிப்புக் கனிய்ப்பைக்கூடச் செய்யாமலுக்கு, உண்மையான குறை குற்றங்களுக்காகக் காறுவாறு பண்ணப் போனாலும் ஏனோ தானோவெண்டு உடுத்த சீலையிலை துடைச்சுப் போட்டு போவிடுங்கள். அதிலையும் ..‘எண்டுவிட்டு கண்களைக் கசக்கி செத்துப்போன மேளையும், மருமேனையும் நினைச்சு கண்ணீர் அருகப் பாஞ்சு ஓடிவர - குரலும் அடைச்சு அடைச்சு விக்கி விக்கிச் சொல்லுவாளே—’ அறுந்த கடவுள் இரண்டு கெட்டுப் பிடிச்சு அதுகள் தலை நீட்டிற அஞ்சு மூண்டு நாளுக்கிடையிலையே அராத்திடிச்சுக் கொண்டு போவிட்டுது... வாண்டுகெட்டு இந்தப் பூமாதேவிக்குப் பாரமா இருக்கிற எங்களைக் கொண்டு போகாமலுக்கு ... பத்தியெரிஞ்ச கடவுள்’ எண்டு திட்டி, இந்த மூளையான்களை நாங்கள் இப்பவே கருக்கினமெண்டால் எங்கடை நாமமும் பிளங்காமல் போவிடும்”

எண்டுதானே அன்னப்பிள்ளை சொல்லுறவள்...என்ன ஞாபகமிருக்கா அல்லி?... அப்பிடிச் சொல்லிச் சொல்லித்தான் என்ரை நெஞ்சை மெழுகாக உருக்கி பேரப்பிள்ளையளை இப்பிடி ஆக்கி வைச்சிட்டுப் போய்யிருக்கிறாள் கண்டியோ. அவள் குடுத்த அந்த இணக்கத்தாலேதான் 'உன்னை ஆர் கண்டது? கேட்டதெண்டு' முதலை இல்லாத குளத்திலை தவளை அதிகாரம் செய்கிற மாதிரி இண்டைக்கு இதுகளும் என்னையும், உங்களையும் படாதபாடு படுத்தி வைக்கிதுகள்.

கேட்டியோ அல்லி, அதுகான் சொல்லுறது பெட்டைக் கோழி கூவி ஒருநாளும் விடியாதெண்டும், பெண்புத்தி பின்புத்திதானெண்டும். அது ஒருநாளும் முன்புத்தியாக இருக்காதுதான் கண்டியோ, அல்லி, நீ அன்னப்பிள்ளையாக இருந்து பெரிய மனிசியாட்டம் எல்லாத்தையும் மூடி மறைச்சு ஊத்தை தெரியாமலுக்கு வேலியை உயத்தி அடைக்கிறது மாதிரி கதைச்சுச் சமாளிக்க நினைக்கிறது நல்லது தான். ஆனால் இன்னும் கையிற் புண்ணுக்கு கண்ணாடி பிடிச்சுப் பாக்க வேணுமெண்டிற மாதிரிக் கதைக்கிற கதையிலை தான் எனக்கு எரிச்சல் வருகிறது கண்டியோ. இல்லையெண்டால் இண்டைக்கு காலமை நானில்லாத சமயம் பார்த்து உன்னையும், இவன் அருச்சுனனையும் நாய்பிடிகாரனைக் கூட்டி வந்து பிடிச்சுக் குடுப்பானே இந்த அறிவற்ற மொக்கன். நாளைக்கு என்னையும் சேர்த்துப் பிடிச்சுக் குடுக்கப் போறானாம். அப்பிடி மூண்டு பேரையும் ஒருமிக்க ஒரேயடியாக பிடிச்சுக் குடுத்திட்டானெண்டால் அவனுக்குப் பெரிய புண்ணியமாப் போவிடும் எனக்கும் இஞ்சை உங்களை விட எந்த மனிசற்றை ஆறுதலும்– அனுசரணையும் கிடக்கு. இந்தச் செய்காரியங்களுக்குப் பிறகும் ஒரு பிள்ளைகளும், குட்டிகளும் எண்டுமொரு பேகமை நினைப்பு வருமே. இல்லை வருமோவெண்டு சேக்கிறன்?– இப்படிப்பட்ட இதுகள் பெற்ற வீட்டுக்கைகயே செத்துப் போயிருந்தாலும் இவளவத்துக்கும் மறந்தும் போயிருக்கும். புத்தியில்லாத கடவுள், இதுகளைக் கொண்டு வந்து என்ரை கொடி கோத்திரத்திலை சேத்து வைச்சிட்டுப் போனதை நினைக்க நினைக்கத்தான் என்ரை நெஞ்சு ஆறுதில்லை கண்டியோ'' என்று, நகச் சொறிவால் ஏற்பட்ட விசப்பருவின் விறுவிறுப்பு வேதனையுடன் தன் நெஞ்சில் நமைச்சல் எடுத்துக் கிடந்த வேதனைகளை மனம் விட்டு– வாய்திறந்து அவ்விடத்தில் சொல்லிக் கொண்டு வந்த முத்தையர் தன் காலடியில் வந்து குந்தியிருந்து தான் சொல்வதையே– தன் வாயையே இமைக்காமல் பார்த்த வண்ணமிருந்த அல்லியைத் தடவிக் கொடுத்தார். அந்தப் பெட்டை நாயின் மயிரற்ற குட்டைத் தேகத்தில் மதிப்பு வைத்து அன்பாக முத்தையர் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்ததை– அதையே இமைக்காமல் பார்த்தவாறு ஏக்கத்துடன் படுத்திருந்தது அருச்சுனன் நாய். அல்லியைப் போலவே ஆகிவிட்டிருந்த அருச்சுனன் நாயைப் பார்த்தார் முத்தையா. அதன் மேல் இரக்கம் கொண்டவராக அதனையும் தன்னருகே வரும்படி அழைத்தார்.

''என்ன அருச்சுனா, ஏங்கிப் போய் கிடக்கிறாய்!... சரி, வா இப்பிடி''

முத்தையரின் அருகில் வந்த அருச்சுனனையும் அவர் அன்பாகத் தடவிக் கொடுத்தார். அன்பில் தோய்ந்து கிடந்த அம்மூவரின் உள்ளத்திலும், கண்களிலும் அன்றைய காலைப் பொழுதில் நிகழ்ந்த துன்பகரமான சம்பவத்தின் பயங்கரம் அவர்களை வெகுவாகப் பாதித்து விட்டதென்பது தெரிந்தது.

(தொடரும்)



தெரிந்த பெயர்
தெரியாத விபரம்

## சதுரங்கம்

தமிழ் மக்களின் பாரம்பரிய பொழுது போக்கு விளையாட்டுக்களில் 'சதுரங்க'மும் ஒன்று. அறுபத்திநான்கு கட்டங்கள் இடப்பட்ட பலகையில் 32 கவறு(காய்)களை வைத்து இருவர் ஆடும் ஆட்டமே சதுரங்கம். இவ் விளையாட்டு போரை மையமாகக் கொண்டதாக ஆட்டப் பலகையைக் கடந்து எதிரியின் தொடக்கக் கோட்டினை அடைந்து 'அரசு'க் காய் முடிசூட்டப் படுவதாக அமைகிறது. பாரதத்தில் தான் இவ் விளையாட்டு ஆரம்பமாகிப் பிரபல்யமானது. தமிழில் சதுரங்க ஆட்டம் என்று அழைக்கப்படுவது போல் ஆங்கிலத்தில் சதுரங்கப் படைகள் ஒவ்வொன்றின் பெயரையும் கொண்டே (Chess) செஸ் என்று அழைக்கப்படுகின்றது.

Chariot - இரதம்
Horse - குதிரை
Elephant - யானை
Soldier - சிப்பாய்
S -பன்மையைக் குறிப்பதற்காக.

இதனாலேயே Chess (செஸ்) என்று அழைக்கப்படுகிறது.

### கர்ப்பகால மரணங்கள்

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 இலட்சம் பெண்கள் கர்ப்ப காலத்தில் அல்லது குழந்தை பிறக்கும் போது இறக்கின்றனர். இவர்களில் 99 %. பேர் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று உலக வங்கியின் தலைவர் பார்பர் கொனாபிள் கூறியுள்ளார்.

## சங்கச் செய்திகள் ஆனி — ஆடி 1987

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

பாண்டியன் குளம்—துணுக்காய் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. ந. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 30-5-87ல் நடைபெற்றது.

மாவட்டக் கூட்டுறவு அதிகாரி திரு. ம. வைத்திலிங்கம், வட்டாரக் கூட்டுறவு பரிசோதகர் திரு. சி. சந்திரசேகரம், புதுக்குடியிருப்பு தெ. ப. பொ. கூ. சங்க பொது முகாமையாளர் திரு. யா. எட்வேட், முல்லைத்தீவு தெ. ப. பொ. கூ. சங்க தலைவர் திரு. மோ. பெனடிக் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தலைவர் தமதுரையில், 86-ம் ஆண்டில் சங்கம் சாதித்துள்ள செயல்பாட்டு சாதனைகளையும், எதிர்கால திட்டங்கள் பற்றியும் அவை நடைமுறைப் படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினர்.

பாண்டியன்குளம் உதவி அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அவர்கள் உட்பட சங்கத்தின் துரித வளர்ச்சிக்கு அங்கத்தவர், ஊழியர்கள், இயக்குனர்கள் ஆகியோரது ஒத்துழைப்பே காரணமென்று மற்றும் பலரும் புகழ்ந்து பேசினார்கள்.

### புதிய நிர்வாக சபை

நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு மாவட்ட கூட்டுறவு அதிகாரி திரு. ம. வைத்திலிங்கம் தலைமையில் இடம் பெற்றது. திரு. ந. ஆறுமுகம் தலைவராக மீண்டும் ஏகமனதாக தெரிவு செயயப்பட்டார். உபதலைவராக திரு. க. செல்வராசாவும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

புதிய இயக்குனர் சபை விபரம் வருமாறு.

திரு. ந. ஆறுமுகம் (தலைவர்) திரு. க. செல்வராசா (உபதலைவர்) திரு. த. இராசேந்திரம் (செயலாளர்) மற்றும் திருவாளர்கள், வே. தங்கராசா, சி. நடராஜா, ச. தர்மலிங்கம் சி. சின்னராசா, நா. சுப்பிரமணியம், மா. கிறிஸ்தோப்பர்.

---

### பாலர் பாடசாலைகள்

சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமான நலனில் பாண்டியன்குளம் — துணுக்காய் தெ. ப. பொ. கூ. சங்கம் பெரிதும் அக்கறை கொண்டு செயலாற்றி வருவதை அண்மையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போது சங்கத்தின் இம்முன்மாதிரியையும், நல்ல நோக்கத்தையும் பலரும் பாராட்டிப் பேசியது குறிப்பிடத்தக்கதாகும்.

தேருங்கண்டல், தென்னையன் குளம், மூன்று முறிப்பு, செல்வபுரம் வடக்கு, கூர்த்திமூலை ஆகிய இடங்களில் பாலர் பாடசாலைகளை அமைத்து அங்கத்தவர்களின் குழந்தைகள் கல்வி பயில்வதற்குரிய வாய்ப்பை சங்கம் ஏற்படுத்தியுள்ளது.




பனை அபிவிருத்திச் சபை